©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 7.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 21A] சென்னை, செவ்வாய்க்கிழமை, ஜனவரி 31, 2017
தை 18, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

| | பக்கங்கள் |
|---|---|
| சட்டமுன்வடிவுகள் :— | |
| எண் 7/2017—தமிழ்நாடு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சேர்க்கைகான சட்டம் .. .. .. | 2-6 |
| எண் 8/2017—தமிழ்நாடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம் .. .. .. .. | 7-10 |
| எண் 9/2017—தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைத் (ஒழுங்குமுறைபடுத்தும்) திருத்த சட்டம் .. .. .. .. .. .. | 11-14 |
| எண் 10/2017—தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம் .. .. | 15-16 |
| எண் 11/2017—தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டம்.. .. .. | 17-18 |

2017—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2017.**

**மருத்துவ அறிவியல் இளநிலை (MBBS) மற்றும் பல்மருத்துவ இளநிலை (BDS) படிப்புகளுக்கு தகுதித் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கைக்கு வகை செய்வதற்கான ஒரு சட்ட முன்வடிவு.**

இந்திய அரசு, மருத்துவ இளநிலைப் பட்டப்படிப்பு அளவில் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு அளவில் அனைத்து மருத்துவ கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பல் மருத்துவ கல்வி நிறுவனங்களுக்கும் ஒரே சீரான நுழைவுத் தேர்வை நடத்துவதற்கு, 1956 ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மன்றச் சட்டத்தை (மையச் சட்டம் 102/1956) மற்றும் 1948—ஆம் ஆண்டு பல் மருத்துவர்கள் சட்டத்தை (மையச் சட்டம் 16/1948) திருத்தம் செய்திருக்கிறது என்பதாலும்;

மற்றும் தமிழ்நாட்டில் கிராமப்புறங்களிலிருந்து அதிக அளவில் மாணவர்கள் ஒரே சீரான நுழைவுத் தேர்வில் கலந்து கொள்வார்கள் மற்றும் அவர்களுடைய இருப்பிடத்திலுள்ள பகுதியில் இந்த நுழைவுத் தேர்வை அவர்கள் எழுதுவதற்கு அவர்களை தயார்படுத்திக் கொள்ள கற்பிக்கும் மையங்கள் இல்லை என்பதாலும், போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினாலும், அவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளதாலும்;

மற்றும், ஒரே சீரான நுழைவுத் தேர்வு என்பது பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் மனச் சுமையை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்ற காரணத்தாலும், இது மாணவர்களின் எதிர்காலத்தை ஒரு முறை மட்டும் எடுக்கக் கூடிய முயற்சியினால் நிர்ணயிப்பதாக இருக்கின்றது என்பதாலும்;

மற்றும் மேல்நிலைக் கல்விக்காக (+2) எழுதப்படும் தேர்வினை, சிறந்த மதிப்பெண் அடிப்படையில் அனுமதி பெறுவது என்பது மாணவர்களுக்கு ஒரு சுமையாக இருக்கும்பொழுது, அதுவே மேற்படிப்பிற்கும், தொழிற்கல்வி சேர்க்கைக்கும் தகுதித் தேர்வாக செயல்படும் நிலையில் இதன் பிறகு தனியாக நடத்தப்படும் ஒரே சீரான தேர்வு என்பது தேவையற்றது. ஏனெனில், இது மாணவர்களுக்கு கூடுதலான சுமையை ஏற்படுத்துவதாக இருக்கிறது என்பதாலும்;

மற்றும், ஒரே சீரான நுழைவுத் தேர்வின் பாடத்திட்டம், பாடப்பிரிவு மற்றும் அவற்றில் அடங்கியுள்ளவை, மேல்நிலைக் கல்விப் படிப்பிற்காக மைய அரசின் மேல்நிலைக் கல்விக்கான மைய வாரியத்தின் பாடத்திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இது தமிழ்நாடு மேல்நிலைக் கல்வி வாரியத்தினால் வகுத்துரைக்கப்பட்ட பாடத்திட்டத்திலிருந்து வேறுபட்டு இருக்கிறது என்பதாலும்;

தமிழ்நாடு மாநிலத்தில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை தீர்க்கும் வகையில், தமிழ்நாடு அரசு, மருத்துவ அறிவியல் இளநிலை படிப்பு (MBBS) மற்றும் பல் மருத்துவ படிப்புகளில் (BDS) மாணவர்களை சேர்ப்பதற்கு மாணவர்கள் மேல்நிலை கல்வி (+2) தேர்வில் பெற்றுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில் தொடர்ந்து சேர்த்துக் கொள்வதெனவும், இது மாணவர்களின் சேர்க்கைக்கான தகுதித் தேர்வாக கருதப்படும் என்றும், கொள்கை முடிவு ஒன்றை எடுத்துள்ளது.

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் சட்டமாக இயற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம் 2017—ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சேர்க்கைக்கான சட்டம் என்று அழைக்கப்பெறும்.

(2) இது தமிழ்நாடு அரசால் அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,– பொருள் வரையறைகள்.

(a) ''உரிய அதிகார அமைப்பு'' என்பது, மருத்துவ அறிவியல் இளநிலை (MBBS) மற்றும் பல் மருத்துவ இளநிலை (BDS) படிப்புகளில் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, ஒதுக்கீடு செய்வதற்கு, அரசால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகம் அல்லது ஒரு அதிகாரஅமைப்பு என்று பொருள்படும்.

(b) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்.

(c) ''அரசு இடங்கள்'' என்பது,

(i) அகில இந்திய ஒதுக்கீட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் தவிர, அரசு கல்லூரிகளில் உள்ள மருத்துவ அறிவியல் இளநிலை (MBBS) மற்றும் பல் மருத்துவ இளநிலை (BDS) படிப்புகளில் உள்ள அனைத்து இடங்களும்;

(ii) சிறுபான்மையல்லாத கல்வி நிறுவனங்கள் மற்றும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒத்திசைவிற்கிணங்க சிறுபான்மையல்லாத கல்வி நிறுவனங்களில் உள்ள மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகளில் **65** விழுக்காடு இடங்கள் மற்றும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களிலுள்ள **50** விழுக்காடு இடங்கள்;

(d) ''சிறுபான்மை கல்வி நிறுவனம்'' என்பது, வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அரசால் ஏற்பளிக்கப்பட்ட அல்லது விளம்புகை செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள் என்று பொருள்படும்.

(e) ''மருத்துவ அறிவியல் இளநிலை (MBBS) மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் (BDS) என்பது, முறையே இளநிலை மருத்துவம் மற்றும் இளநிலை அறுவை சிகிச்சை மற்றும் இளநிலை பல் மருத்துவ அறுவை சிகிச்சைப் படிப்புகளின் முதலாமாண்டு படிப்பு என்று பொருள்படும்.

(f) ''கல்வி நிறுவனம்'' என்பது உரிய சட்ட ரீதியான அமைப்பில் மற்றும் பல்கலைக் கழகம் ஒன்றுடன் இணைக்கப்பட்டுள்ளவற்றால் ஒப்புதலளிக்கப்பட்டு அல்லது ஏற்பளிக்கப்பட்டு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகளை நடத்தும் சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் உள்ளடங்கலாக, அது எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும், கல்லூரி அல்லது பள்ளி எதுவும் அல்லது ஒரு நிறுவனம் என்று பொருள்படும்.

(g) ''தகுதித் தேர்வு'' என்பது தமிழ்நாடு மேல்நிலைக் கல்வி தேர்வு வாரியத்தால் மேல்நிலைக் கல்வி (+2) அளவில் நடத்தப்படும் தேர்வு அல்லது அதற்கு இணையான மத்திய இடைநிலை கல்விக் குழுமம் (CBSE) அல்லது பிற மாநிலம் எதனின் வாரியத்தால் அல்லது பிற அதிகார அமைப்பு எதனாலும் நடத்தப்படும் தேர்வு என்று பொருள்படும்.

(h) ''தொடர்புடைய பாடங்கள்'' என்பது, இளநிலை மருத்துவ அறிவியல் (MBBS) மற்றும் பல் மருத்துவப் (BDS) படிப்புகளில் சேர்வதற்காக வகுத்துரைக்கப்பட்ட பாடங்கள் என்று பொருள்படும்.

(i) ''மாநில வாரியம்'' என்பது, தமிழ்நாடு மேல்நிலைக் கல்வி தேர்வு வாரியம் என்று பொருள்படும்.

(j) ''பல்கலைக்கழகம்'' என்பது, சட்டமன்றப் பேரவையின் சட்டம் ஒன்றினால் நிறுவப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பல்கலைக்கழகம் என்று பொருள்படும்.

மையச்சட்டம் 43/1961 (k) ''இந்தியாவில் குடியிராத இந்தியர்'' என்கின்ற சொற்றொடரானது, **1961**–ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள பொருளைக் கொண்டிருக்கும்.

அரசு இடத்திற்கான சேர்க்கை.

**3.** பிற சட்டம் அல்லது விதிகள், ஒழுங்குமுறை விதிகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட துணை விதிகள் எதிலும் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், ஒவ்வொரு அரசு இடத்திற்கான சேர்க்கை, தகுதித் தேர்வுக்குத் தொடர்புடைய பாடங்களில் ஒரு மாணவரால் பெறப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில், உரிய அதிகார அமைப்பால் செய்யப்படுதல் வேண்டும்.

மதிப்பெண்கள் சரிசமமாக்கப்–படுதல்.

**4.** (1) பல்வேறுபட்ட வாரியங்கள் அல்லது அதிகார அமைப்பால் நடத்தப்படும் தகுதித் தேர்வில் தொடர்புடைய பாடங்களில், மாணவர்களால் பெறப்பட்ட மதிப்பெண்களை சரிசமமாக்குதல் அடிப்படையில், மாநில வாரியத்தால் நடத்தப்படும் தகுதித் தேர்வில் அதே பாடங்களில் மாணவர்களால் பெறப்பட்ட மதிப்பெண்களுடன் சரிசமமாக்கப்படுதல் வேண்டும்.

**விளக்கம்.–** சரிசமமாக்கப்படுதல் முறையின்படி, ஒவ்வொரு பாடத்திலும் பல்வேறுபட்ட வாரியங்களின் முறையில் படித்த மாணவர்களால் பெறப்பட்ட அதிகப்படியான மதிப்பெண்கள் அதே பாடத்தில் மாநில வாரியத்தின் மாணவர்களால் பெறப்பட்ட அதிகப்படியான மதிப்பெண்களுக்கு சரிசமமாக்கப்படுதல் வேண்டும். மற்றும் அந்தப் பாடத்தில் பிற மாணவர்களால் பெறப்பட்ட தொடர்புடைய மதிப்பெண்கள் அதன்படி சரிசமமாக்கப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டுகளுடன் விளக்குதல்.–** மாநில வாரியத்தின் மாணவரால், வேதியியல் பாடத்தில் எடுக்கப்பட்ட அதிகப்படியான மதிப்பெண்கள் 100–ஆக இருக்கிறதென்றால் மற்றும் அதே பாடத்தில் பிற வாரியம் எதனின் மாணவரால் எடுக்கப்பட்ட அதிகப்படியான மதிப்பெண்கள் 90–ஆக இருக்கிறதென்றால், இரு அதிகப்படியான மதிப்பெண்களும் 100 மதிப்பெண்ணுக்கு சரிசமமாக இருக்கும் என்று கருதப்பட வேண்டும். பிற வாரியத்தின் மாணவரொருவர் வேதியியல் பாடத்தில் 70 மதிப்பெண்கள் எடுத்திருக்கிறாரென்றால், அதே வாரியத்தில் வேதியியல் பாடத்தில் எடுத்திருக்கும் முதல் மதிப்பெண் 90–ஆக இருக்கும் பொழுது 70 மதிப்பெண்ணானது 77.77 மதிப்பெண்களுக்கு கீழ்க்காணுமாறு கணக்கிடப்பட்டிருப்பது சரிசமமானதாக இருக்கும் என்று கருதப்படும்.

$$\frac{100x70}{90} = 77.77\%$$

(2) பல்வேறுபட்ட வாரியங்களால் நடத்தப்பட்ட தகுதித் தேர்வில் தொடர்புடைய பாடங்களில் மதிப்பெண்கள் சரிசமமாக்கப்பட்டதற்குப் பின்பு பல்வேறுபட்ட வாரியங்களின் தகுதியடைந்துள்ள மாணவர்கள் பொது தகுதிப் பட்டியலுடன் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(3) பொது தகுதிப் பட்டியலில் ஒரே மாதிரியான மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் எடுத்திருக்கின்ற நேர்வில், அத்தகைய மாணவர்களுக்கு இடையிலான சிறப்புத் தரநிலை (inter-se Merit) வகுத்துரைக்கப்பட்டவாறு, அத்தகைய முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) உரிய அதிகார அமைப்பு, அரசு இடங்களுக்கு மாணவர்களை சேர்ப்பதற்கான தரப்பட்டியலைத் தயார் செய்து, ஒருங்கிணைந்த கலந்தாய்வின் (Centralised Counselling) மூலம் மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யவேண்டும்.

இட ஒதுக்கீட்டிற்கான பொருந்துகை.

**5.** அரசு இடத்திற்கான சேர்க்கை, நடைமுறையிலுள்ள சட்டத்தின்படியான ஒதுக்கீடு விதியைப் பின்பற்றி செய்யப்படுதல் வேண்டும்.

சட்டத்தை மீறி செய்யப்பட்ட மாணவர் சேர்க்கை செல்லா நிலையதாகும்.

**6.** நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளை மீறி செய்யப்பட்ட மாணவர் சேர்க்கை எதுவும் செல்லாநிலையதாகும்.

**7.** (1) இந்தச் சட்டத்தின்படியான வகைமுறைகளை அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளை மீறி செயல்படுபவர் எவராக இருப்பினும், அவர் பத்து இலட்சம் ரூபாய்வரை நீட்டிக்கப்படலாகும் பணத் தண்டத்துடன் தண்டிக்கப்படுதல் வேண்டும். தண்டம்.

(2) அரசு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் மீறி கல்வி நிறுவனம் எதுவும் செயல்பட்டிருக்கிறது என்று மனநிறைவடைகிறதென்றால், அத்தகைய செயல்பாட்டின் அடிப்படையில், அத்தகைய நிறுவனத்தின் இணைப்பை அல்லது ஏற்பளிப்பை திரும்பப் பெறுமாறு, தொடர்புடைய பல்கலைக்கழகத்திற்கு அல்லது சட்டரீதியான அமைப்பிற்கு அல்லது அது பொருத்தமெனக் கருதலாகும் மேற்கொண்டு எடுக்க வேண்டிய பிற நடவடிக்கை எதற்காகவும் பரிந்துரை செய்யலாம்.

**8.** இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணையின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும், உரிய அதிகார அமைப்பிற்கு, அரசுக்கு அல்லது அதனுடைய அலுவலர்கள் எவருக்கும் எதிராக உரிமை வழக்கோ, குற்ற வழக்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கைகளோ தொடரப்படுதல் கூடாது. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**9.** அரசு, அவ்வப்போது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செல்திறம் அளிக்கும் வகையில், அதற்குப் பொருத்தமெனத் தோன்றலாகும் அத்தகைய பணிப்புரைகளைப் பிறப்பிக்கலாம். பணிப்புரைகள் வழங்குவதற்கான அதிகாரம்.

**10.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செல்திறம் அளிக்கையில் இடர்ப்பாடு எதுவும் எழுகிறதென்றால், அரசு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஓர் ஆணையின் வாயிலாக இடர்ப்பாட்டினை நீக்குவதற்குத் தேவைப்படக்கூடியதாக அல்லது உகந்ததென அவர்களுக்குத் தோன்றுகிறவாறான, இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்: இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**வரம்புரையாக:—**ஆனால், இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்த பின்பு அத்தகைய ஆணை எதுவும் செய்யப்படுதலாகாது.

**11.** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம். விதிகளைச் செய்வதற்கு அதிகாரம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று வெளிப்படையாக நடைமுறைக்கு வந்திருந்தாலன்றி என்று கூறப்பட்டிருந்தாலன்றி, அதன் பேரில் அவை அவ்வாறு வெளியிடப்பட்டிருக்கின்ற அந்த நாளிலிருந்து நடைமுறைக்கு வரவேண்டும்.

(b) இந்த சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வரும் என்று வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, அதன் பேரில் அவை அவ்வாறு வெளியிடப்பட்டிருக்கின்ற அந்த நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அந்தக் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அந்தக் கூட்டத்தொடரில் அவ்வாறு வைக்கப்படுகிறதென்றால் அல்லது அடுத்தக் கூட்டத்தொடரில் சட்டமன்றப் பேரவை அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாற்றமைவு எதனையும் செய்கிறதென்றால், அல்லது சட்டமன்றப் பேரவை, அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதலாகாது அல்லது பிறப்பிக்கப்படுதலாகாது என்று முடிவு செய்கிறதென்றால், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அதன்படி அத்தகைய மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் பெறும் அல்லது நேர்வுக்கேற்ப செல்திறம் பெறாது போகும். எவ்வாறிருப்பினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஆகியவை முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

## நோக்க – காரண விளக்கவுரை

தற்பொழுது மருத்துவ அறிவியல் இளநிலை (MBBS) மற்றும் பல் மருத்துவ இளநிலை (BDS) படிப்புகளுக்கான சேர்க்கை, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் கல்வி நிறுவனங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/2007) இன் படி மேல்நிலைக் கல்வித் தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் செய்யப்படுகின்றன.

**2.** தற்போது இளநிலை பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு அளவில் அனைத்து மருத்துவக் கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பல் மருத்துவக் கல்வி நிறுவனங்களுக்கும் ஒரே சீரான நுழைவுத் தேர்வை நடத்துவதற்கு இந்திய அரசு, 1956–ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மன்றச் சட்டத்தில் (மையச் சட்டம் 102/1956) மற்றும் 1948–ஆம் ஆண்டு பல் மருத்துவர்கள் சட்டத்தில் (மையச் சட்டம் 16/1948) திருத்தம் செய்திருக்கிறது.

**3.** தமிழ்நாடு மாநிலத்தில் ஒரே சீரான நுழைவுத் தேர்வை எழுதக் கூடிய மாணவர்களில் பெரும்பாலானோர் கிராமப்புறங்களில் இருக்கின்றார்கள் மற்றும் மேற்சொன்ன தேர்வுக்காக அவர்களைத் தயார்படுத்திக் கொள்வதற்கு, அவர்கள் பயிற்சி வகுப்புகளுக்கு சென்று சிறந்த முறையில் தேர்ச்சி பெறுவதற்கு தயார் செய்ய வேண்டியதாயுள்ள அத்தகைய கற்பிக்கும் மையங்கள் இல்லாமல் இருக்கின்றது. அத்தகைய பயிற்சியை அளிக்கும் மையங்கள் அவர்களுடைய பகுதியில் இல்லாமலிருக்கின்ற காரணத்தால் அத்தகைய வசதியை அவர்கள் பெறமுடியாமல் இருக்கின்றது மற்றும் போதுமான நிதி வசதியின்றி அவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் வாழ்கிறார்கள். பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாயுள்ள அனுபவத்தை ஒரே சீரான நுழைவுத் தேர்வு ஏற்படுத்தியிருக்கிறது என்று கருதப்பட்டிருக்கிறது. மாணவர்களின் எதிர்காலத்திற்கு மேல்நிலைக் கல்வித் (+2) தேர்வு என்பது சிறந்த முறையில் தேர்ச்சி பெற வேண்டியதாயுள்ள ஒரு முக்கியமான தேர்வாக இருக்கிறது. இதனடிப்படையில் பார்க்கும்பொழுது ஒரே சீரான நுழைவுத் தேர்வு, மாணவர்களுக்கு ஒரு சுமையாக இருக்கின்றது மற்றும் உயர்கல்வி படிப்பு மற்றும் தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வை ஏற்பதென்பது அதிகப்படியான சுமையாக இருக்கின்றது. மேலும், பாடத்திட்டம், பாடமுறை மற்றும் ஒரே சீரான நுழைவுத் தேர்வு என்பது மத்திய இடைநிலைக் கல்வி குழுமம் (CBSE), மேல்நிலைக் கல்வி படிப்பிற்காக வகுத்துரைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில் இருக்கிறது. இது தமிழ்நாடு மேல்நிலைக் கல்வி தேர்வு வாரியத்தால் வகுத்துரைக்கப்பட்ட பாடத்திட்டத்திலிருந்து வேறுபட்டிருக்கிறது.

**4.** தமிழ்நாடு மாநிலத்தில் மாணவர்கள் மேற்சொன்ன சிரமங்களை எதிர்கொள்ளும் வகையில், அரசு மேல்நிலைக் கல்வியில் பெறப்பட்ட மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ அறிவியல் இளநிலை (MBBS) மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்பிற்கான (BDS) சேர்க்கைக்கு தற்போதுள்ள நடைமுறையே தொடரவேண்டும் என்ற கொள்கை முடிவு ஒன்றை அரசு எடுத்துள்ளது. அதன்படி அரசு, இந்த நோக்கத்திற்காக சட்டமொன்றை கொண்டு வருவதென முடிவு செய்துள்ளது.

**5.** இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மரு.சி. விஜயபாஸ்கர்,**
*மக்கள் நல்வாழ்வு மற்றும்*
*குடும்ப நலத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்
*செயலாளர்.*

2017–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 8/2017.**

**மருத்துவம் மற்றும் பல் மருத்துவ முதுநிலைப் படிப்பு சேர்க்கைக்கு வகை செய்வதற்கானதொரு சட்டமுன் வடிவு.**

இளநிலைப் பட்டப்படிப்பு மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு அளவில், அனைத்து மருத்துவக் கல்வி நிறுவனங்கள் மற்றும் பல் மருத்துவ நிறுவனங்களுக்கு, ஒரே சீரான நுழைவுத் தேர்வை நடத்துவதற்கு, 1956–ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மன்றச் சட்டத்தை (மையச் சட்டம் 102/1956) மற்றும் 1948–ஆம் ஆண்டு பல் மருத்துவர்கள் சட்டத்தை (மையச் சட்டம் 16/1948), இந்திய அரசு திருத்தம் செய்திருக்கிறது என்பதாலும்;

மற்றும், தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக, கிராமப்புறங்களில், எளிதில் அணுக இயலாத மற்றும் மலைப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு, தரமான உயர்மருத்துவ சிகிச்சை ஏற்படுத்தித் தரும் நோக்குடன் முதுநிலைப் பட்டப்படிப்பு உள்ளடங்கலாக மருத்துவக் கல்விக்கு, தன்னிடம் வைத்திருக்கும் பொதுப்பணத்திலிருந்து ஏற்கத்தக்கதாகவுள்ள, ஒரு தொகையை செலவிடுகிறது என்பதாலும் ;

மற்றும், மேற்சொன்ன நோக்கத்துடன், நுழைவுத் தேர்வு மற்றும் மருத்துவப்பணி சார்ந்த அனுபவத்தின் அடிப்படையில், மருத்துவப்படிப்பு மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப்படிப்புகளுக்குரிய சேர்க்கைக்கான தேர்வு, நுழைவுத் தேர்வு மற்றும் பட்டறிவின் அடிப்படையில் தமிழ்நாடு அரசால் செய்யப்படுகிறது. அதில் ஒவ்வொரு சிறப்புப் பாடத்திலும் உள்ள ஐம்பது விழுக்காடு இடங்கள், அரசுப் பணியிலுள்ள மருத்துவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. மேலும், தெரிவு செய்யப்பட்ட அரசு மருத்துவர்களின் பணி, அவர்கள் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறும்வரை, தேவையானதாகக் கருதப்படுகிறது என்பதாலும், அரசுப் பணியில் இல்லாத மருத்துவர்கள், படிப்பினை முடித்த பிறகு, இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலத்திற்கு, அரசுக்கு சேவை செய்கின்றார்கள் என்பதாலும்;

மேற்சொன்ன சூழ்நிலையில், மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் படிப்புகளுக்குரிய சேர்க்கைக்கு, ஒரே சீரான நுழைவுத் தேர்வு மைய அரசால் நடத்தப்படுவதாக இருக்கிறதென்றால், அத்தகைய படிப்புகளுக்காக சேர்க்கை தொடர்பாக, மாநில அரசால் தற்பொழுது பின்பற்றப்பட்டு வரும் சேர்க்கை திட்டம், மாறிச் செல்லக்கூடியதாக இருக்கும் மற்றும் கிராமப்புறம் மற்றும் தேவைப்படும் மக்களுக்குத் தரப்படும் தரமான உயர் மருத்துவச் சிகிச்சைக்கான சேவையின் நோக்கம் பாதிக்கப்பட்டுவிடும் என்பதாலும்;

தற்பொழுது அத்தகையதான ஒரு சூழ்நிலையை தவிர்க்கும் வகையில், மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலை படிப்புகளுக்குரிய சேர்க்கை தொடர்பானவற்றில் தற்போதுள்ள நடைமுறையே தொடரவேண்டும் என்பதற்காகவும் மற்றும் அதற்காக சட்டப்பூர்வமான பின்புலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் மாநில அரசு கொள்கை முடிவொன்றை எடுத்திருக்கிறது.

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்ட மன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2017–ஆம் ஆண்டு 'தமிழ்நாடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம்' என்று அழைக்கப் பெறும்.

(2) மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையரைகள்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,

(a) "உரிய அதிகார அமைப்பு" என்பது, மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கு சேர்க்கைக்காக மாணவர்களைத் தெரிவு செய்வதற்கும் மற்றும் ஒதுக்கீடு செய்வதற்கும் அரசால் அதிகாரமளிக்கப் பெற்ற பல்கலைக்கழகமொன்று அல்லது அதிகார அமைப்பு ஒன்று என்று பொருள்படும்.

(b) “அரசு” என்பது மாநில அரசு என்று பொருள்படும்.

(c) “அரசு இடங்கள்” என்பது,-

(i) அகில இந்திய அளவிலான ஒதுக்கீட்டிற்காக ஒதுக்கப்படும் இடங்கள் தவிர, அரசு கல்லூரிகளில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப்படிப்பில் ஒவ்வொரு சிறப்புப் பாடத்திலும் உள்ள அனைத்து இடங்கள் என்று பொருள்படும்.

(ii) சிறுபான்மையல்லாத கல்வி நிறுவனங்கள் மற்றும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கும் – அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒத்திசைவிற்கிணங்க, சிறுபான்மையல்லாத கல்வி நிறுவனங்களில், மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில், முதுநிலைப் பட்டப் படிப்புகளில் ஒவ்வொரு சிறப்புப் பாடத்திலும் உள்ள **65** விழுக்காடு இடங்கள் மற்றும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளில் ஒவ்வொரு சிறப்புப் பாடத்திலும் உள்ள **50** விழுக்காடு இடங்கள்.

(d) “சிறுபான்மை கல்வி நிறுவனம்” என்பது, வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அரசால் ஏற்பளிக்கப்பட்ட அல்லது விளம்புகை செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள் என்று பொருள்படும்.

(e) “மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப்படிப்புகள்” என்பது, முதுநிலைப் பட்டப்படிப்பு அல்லது மருத்துவத்தில் பட்டயம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப்படிப்புகளில் முதலாமாண்டு என்று பொருள்படும்.

(f) “கல்வி நிறுவனம்” என்பது, முதுநிலைப் பட்டம் அல்லது பட்டயத்தை வழங்குவதற்கு உறுதுணையாக இருக்கும் மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளை நடத்தும், சிறுபான்மை நிறுவனம் உள்ளடங்கலாக அது எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும் கல்லூரி அல்லது நிறுவனம் எதுவும் என்று பொருள்படும்.

(g) “நுழைவுத் தேர்வு” என்பது, வகுத்துரைக்கப்பட்ட முறையில் உரிய அதிகார அமைப்பினால் நடத்தப்படும் தேர்வு என்று பொருள்படும்.

(h) “பல்கலைக்கழகம்” என்பது, மாநில சட்டமன்றத்தின் ஒரு சட்டத்தால் நிறுவப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பல்கலைக் கழகம் என்று பொருள்படும்.

அரசு இடத்திற்கான சேர்க்கை.

3. பிற சட்டம் அல்லது விதிகள், ஒழுங்குமுறைகள் எதுவும் அல்லது அதன்படி செய்யப்பட்ட துணை விதிகள் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்பில் ஒவ்வொரு சிறப்புப் பாடத்திலும் உள்ள ஒவ்வொரு அரசு இடத்திற்கான சேர்க்கை பெறப்பட்ட மாணவரால் நுழைவுத் தேர்வு மதிப்பெண்கள் மற்றும் வகுத்துரைக்கப்பட்ட பட்டறிவினைப் பொறுத்து உரிய அதிகார அமைப்பால் செய்யப்படுதல் வேண்டும்.

இட ஒதுக்கீட்டிற்கான பொருந்துகை.

**4.** தற்போதைக்கு செல்லாற்றலிலுள்ள சட்டத்தின் படியான ஒதுக்கீடு விதியைப் பின்பற்றி அரசு இடங்களுக்கான சேர்க்கை செய்யப்படுதல் வேண்டும்.

அரசு மருத்துவர்–களுக்கான இடங்களின் ஒதுக்கீடு.

**5.** மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப்படிப்பிலுமுள்ள ஒவ்வொரு சிறப்புப் பாடத்திலுமுள்ள அரசு இடங்களுக்குரிய ஐம்பது விழுக்காடு அரசுப் பணியிலுள்ள மருத்துவர்களுக்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்.

பிணைப் பத்திரத்தை செயல்படுத்துதல்.

**6.** மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்பிற்குரிய சேர்க்கைக்காக தேர்வு செய்யப்படும் ஒவ்வொரு நபரும் வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய பிணைப் பத்திரம் ஒன்றை அளித்தல் வேண்டும்.

இச்சட்டத்தை மீறி செய்யப்பட்ட சேர்க்கை செல்லா நிலையதாகும்.

**7.** தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளை மீறி செய்யப்பட்ட சேர்க்கை எதுவும் செல்லா நிலையதாகும்.

தண்டம்.

**8. (1)** இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு முரணாக செயல்படுகிறவர் எவராயிருப்பினும், பத்து லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்துடன் தண்டிக்கத் தக்கவராவார்.

(2) அரசு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும், கல்வி நிறுவனம் எதுவும் மீறியிருக்கிறது என்று கருதுமேயானால், அத்தகைய நிறுவனத்தின் இணைப்பை அல்லது ஏற்பளிப்பை திரும்பப் பெறுவதற்காக தொடர்புடைய பல்கலைக்கழகத்திற்கு அல்லது சட்டப்பூர்வமான அமைப்பிற்கு அல்லது அதற்குப் பொருத்தமெனத் தோன்றலாகிறவாறான பிற நடவடிக்கை எதற்காகவும் பரிந்துரை செய்யலாம்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**9.** இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணையின்படி, நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும் உரிய அதிகார அமைப்பிற்கு, அரசுக்கு அல்லது அதனுடைய அலுவலர்கள் எவருக்கும் எதிராக உரிமை வழக்கோ அல்லது குற்ற வழக்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கையோ தொடரப்படுதல் கூடாது.

பணிப்புரைகள் வழங்குவதற்கான அதிகாரம்.

**10.** அவ்வப்போது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செல்திறம் அளிப்பதற்காக அதற்குப் பொருத்தமெனத் தோன்றலாகிறவாறான அத்தகைய பணிப்புரைகளை அரசு பிறப்பிக்கலாம்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**11.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செல்திறம் அளிக்கையில் இடர்ப்பாடு எதுவும் எழுகிறதென்றால், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படலாகும் ஓர் ஆணையின் வாயிலாக இடர்ப்பாட்டினை நீக்குவதற்குத் தேவையானதாக அல்லது உகந்ததென அவர்களுக்கு தோன்றுகிறவாறான இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளை அரசு செய்யலாம்;

**வரம்புரையாக:** ஆனால் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்த பின்பு அத்தகைய ஆணை எதுவும் செய்யப்படுதலாகாது.

விதிகளைச் செய்வதற்கு அதிகாரம்.

**12.** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று வெளிப்படையாக நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று கூறப்பட்டிருந்தாலன்றி, அதில் அவை அவ்வாறு வெளியிடப்பட்டிருக்கின்ற அந்த நாளிலிருந்து நடைமுறைக்கு வர வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, அதில் அவை அவ்வாறு வெளியிடப்பட்டிருக்கின்ற அந்த நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி, பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், சட்டமன்ற பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும். அந்தக் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்தக் கூட்டத் தொடரில், அவ்வாறு வைக்கப்பட்டதில் அல்லது அடுத்தக் கூட்டத் தொடரில், சட்டமன்றப் பேரவை அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதலாகாது அல்லது பிறப்பிக்கப்படுதலாகாது என்று முடிவு செய்கிறதென்றால், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அதன்படி அத்தகைய மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையதாகும் அல்லது நேர்வுக்கேற்ப செல்திறம் இல்லாது போகும் என்றும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஆகியவற்றின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

**நோக்க – காரண விளக்கவுரை**

அகில இந்திய அளவில் ஒதுக்கப்பட்டுள்ள ஐம்பது விழுக்காடு இடங்களைத் தவிர்த்து, நுழைவுத்தேர்வு மற்றும் மருத்துவப் பணி சார்ந்த அனுபவத்தின் அடிப்படையில், மாநிலத்தில், மருத்துவம் மற்றும் பல் மருத்துவ முதுநிலைப் படிப்பிற்குரிய சேர்க்கைக்கான தேர்வு தற்பொழுது மாநில அரசால் செய்யப்படுகின்றன. ஐம்பது விழுக்காடு, ஒவ்வொரு சிறப்பு படிப்புப் பிரிவிலுள்ள இடங்கள் அரசுப் பணியிலுள்ள மருத்துவர்களுக்கு தேர்வின் அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. அரசு மருத்துவர்கள் அவர்கள் ஓய்வுபெறும் வரை அரசுக்கு பணி செய்வதற்காக தேவைப்படுகிறார்கள் மற்றும் அரசு பணியில் இல்லாத மருத்துவர்கள் படிப்பை முடித்த பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத ஒரு காலத்திற்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு தரமான உயர் மருத்துவ சிகிச்சையினை ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன், குறிப்பாக கிராமப்புறம், எளிதில் அணுக இயலாத மற்றும் மலைப் பிரதேசங்களில் வாழ்கின்றவர்களுக்கு மருத்துவ பணி ஆற்ற வேண்டும்.

2. தற்பொழுது, மருத்துவ இளநிலை பட்டப்படிப்பு மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு அளவில் சேர்க்கைக்காக அனைத்து மருத்துவக் கல்வி நிறுவனங்கள் மற்றும் பல் மருத்துவக் கல்வி நிறுவனங்களுக்கு, ஒரே சீரான நுழைவுத் தேர்வை நடத்துவதற்கு, இந்திய அரசு, 1956–ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மன்றச் சட்டத்தில் (மையச் சட்டம் 102/1956) மற்றும் 1948–ஆம் ஆண்டு பல் மருத்துவர்கள் சட்டத்தில் (மையச் சட்டம் 16/1948) திருத்தம் செய்திருக்கிறது.

3. மேற்சொன்ன சூழ்நிலையில், இந்திய அரசு, மருத்துவம் மற்றும் பல் மருத்துவ முதுநிலைப் படிப்புகளுக்குரிய சேர்க்கைக்கு ஒரே சீரான நுழைவுத் தேர்வை நடத்துமேயானால், அத்தகைய படிப்புகளுக்கான சேர்க்கை தொடர்பாக மாநில அரசால் தற்பொழுது பின்பற்றப்பட்டு வரும் திட்டம் மாறக் கூடியதாக இருக்கும். கிராம மக்களுக்கும், மருத்துவ சிகிச்சை தேவைப்படும் இதர மக்களுக்கும் தரப்படும் தரமான உயர் மருத்துவச் சிகிச்சைக்கான நோக்கம் பாதிக்கப்பட்டுவிடும். எனவே, மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் படிப்புகளுக்குரிய சேர்க்கைக்கான தற்போதுள்ள முறையே தொடர வேண்டும் என்பதன் பொருட்டும், அதற்கான சட்டப்பூர்வ உதவியை அளிப்பதற்குமான நோக்கத்திற்காக அரசு, சட்டமொன்றைக் கொண்டு வருவதாக முடிவு செய்திருக்கிறது.

4. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மரு.சி. விஜயபாஸ்கர்,**
*மக்கள் நல்வாழ்வு மற்றும்*
*குடும்ப நலத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்
*செயலாளர்.*

2017–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2017.**

**1987ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் விற்பனைச் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைத் (ஒழுங்குமுறைப்படுத்தும்) திருத்த சட்டம் என்று அழைக்கப்படும்.

(2) இந்தச் சட்டத்தின் பிரிவு 6, 2015 ஆம் ஆண்டு மே 31 அன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின்பிற அனைத்து வகைமுறைகளும் மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வரும்.

தமிழ்நாடு சட்டம் 27/1989

2. ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன் பின்பு முதன்மைச்சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (8) ஆம் உட்பிரிவுக்கு பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது.–

(8) “இயக்குநர்”என்பது வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்தின் இயக்குநர் அல்லது ஆணையர் அல்லது நேர்வுக்கேற்ப வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்தின் சிறப்பு ஆணையர் என்று பொருள்படும் மற்றும் அறிவிக்கையில் குறிப்பிடப்படலாகிறவாறான அத்தகைய பரப்பிடத்திற்காக இந்தச் சட்டத்தின்படி இயக்குநரின் செயற்பணிகளைச் செய்து முடிப்பதற்கு அறிவிக்கையினால் அரசால் அதிகாரமளிக்கப் பெற்ற பிற நபர் அல்லது அதிகார அமைப்பு எவரையும் உள்ளடக்கும்.

(8–a) “மின்னணு வணிகம்” என்பது, கணினி வலைப்பின்னல் அல்லது மின்னணு கணினி வலைப்பின்னல் அடிப்படையில் ரசீது போடுதல், பதிவு செய்தல், உடன்படிக்கை, மாற்றுதல், தகவல் பரிமாற்றம், கோப்பினை பராமரித்தல், கணினி வழி வணிகம், கணினி மூலமான செலுத்தம் மற்றும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்பட்ட நன்மை தரக்கூடிய ஒரு கணினி மென்பொருள் இடம் என்று பொருள்படும்.

6 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் ‘‘அத்தகைய வசதிகளை ஏற்படுத்தித் தருதல்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மின்னணு வணிகம் உள்ளடங்கலாக அத்தகைய வசதிகளை ஏற்படுத்தித் தருதல்’’ எனும் சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

8-A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது,–

(8–A) ‘‘மாநிலத்தில் வேளாண் விளைபொருள் வணிகம்’’.–

(1) 8 ஆம் பிரிவில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும் அறிவிப்பு செய்யப்பட்ட சந்தைப் பரப்பிடத்தில் அறிவிப்பு செய்யப்பட்ட வேளாண் விளைபொருள் எதனையும் வாங்குவது மற்றும் விற்பனை செய்வது தொடர்பான பிற எந்த தகுதிறத்திலும் அல்லது வாங்குவது அல்லது விற்பனை செய்வது அல்லது செயல்முறைப்படுத்தும் நபர் ஒருவருக்கு உரிமம் ஒன்று இயக்குநர் அல்லது இதுதொடர்பாக அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற நபரால் வழங்கப்படலாம் மற்றும் உரிமம் பெறுவதற்காக ஒவ்வொரு விண்ணப்பமும் அத்தகைய

படிவத்தில் அத்தகைய முறையில் மற்றும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய கட்டணத்துடன் செய்யப்படுதல் வேண்டும்.

(2) உரிமம் ஒன்று (1) ஆம் உட்பிரிவின்படி, நபர் ஒருவருக்கு கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் உரிமம் ஒன்று வழங்குதல் என்பது மறுக்கப்படலாம்.

(a) எவரின் உரிமம் விற்பனைக் குழுவால் மற்றும் இயக்குநரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலரால் ரத்து செய்யப்பட்டிருந்து மற்றும் ரத்து செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடையாமல் இருக்கிறதென்றாலோ, அல்லது

(b) எவரும் ஒரு குற்றத்திற்காக தண்டனை பெற்றிருக்கிறார் என்றால் அத்தகைய குற்றம் அவருடைய வணிகத்திற்கு அல்லது அவருடைய ஒருமைப்பாடு அவரை வணிகத்தின் ஒரு மனிதனாக தொடர்புடையதாக்குகிறதாக இருக்கின்றவிடத்தும், அல்லது

(c) எவர் தொடர்பாகவும், இயக்குநர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பெற்ற அலுவலர் அத்தகைய விசாரணை போதுமானது என்று அவர் கருதியதற்குப் பின்பு திருப்தியடைந்திருக்கிறார் என்றால் அவர் ஒரு பெயரிரவல்தாரர் அல்லது பிற நபர் எவருடனும் பங்குதாரராக இருக்கிறார் என்கின்றபோது அந்த நபருக்கு கூறு (a) அல்லது கூறு (b) இன்படி உரிமம் ஒன்று வழங்குவதற்கு மறுக்கப்பட்டிருக்கிறதென்றாலோ,

(3) இது தொடர்பாக அவருக்கு செய்யப்பட்ட சுட்டுகையொன்றின் பேரிலோ அல்லது பிறவாறாகவோ இயக்குநர் ஒருவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் திருப்தியடைந்திருக்கிறாரென்றால் அதாவது,

(a) (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட உரிமம் ஒன்று தவறான வழியில் அல்லது மோசடியால் பெறப்பட்டிருக்கிறது என்றும் அல்லது

(b) உரிமத்தை வைத்திருப்பவர் முரண்பட்டிருக்கிறார் அல்லது இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதற்கும் அல்லது விதிகள் அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட துணை விதிகள் அல்லது உரிமத்தின் வரைக்கட்டுகள் எதற்கும் இணங்கிய வகையில் இல்லாமல் இருக்கிறார் என்றால், அதன் பின்பு பிற தண்டம் எதற்கும் குந்தகமின்றி உரிமம் வைத்திருப்பவர் இந்தச் சட்டத்தின்படி கடப்பாடுடையவராக இருப்பார். இயக்குநர், இது தொடர்பாக செய்யப்படலாகிறவாறான அத்தகைய விதிகளுக்கு உட்பட்டு உரிமம் ரத்து செய்யப்பட்டதற்கு எதிராக உரிய காரணத்தைக் கூறுவதற்கான நியாயமான வாய்ப்பொன்றினை உரிமம் வைத்திருப்பவருக்கு அளித்த பின்பு உரிமத்தை ரத்து செய்யலாம் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

(4) (a) உரிமம் ஒன்று வழங்க மறுத்தல் அல்லது

(b) ரத்து செய்தல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் ஆகியவற்றிற்கான, இயக்குநர் அவர்களின் முடிவினால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய காலத்திற்குள் வாரியத்திற்கு மேல்முறையீடு செய்யலாம் மற்றும் வாரியம் அது பொருத்தமெனநினைக்கலாகிறவாறான நேர்வில் அத்தகைய ஆணையை பிறப்பிக்கலாம்.

(5) (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட உரிமம் மூன்றாண்டுகள் செல்லத்தக்கதாக இருக்கும்.

(6) (1) ஆம் உட்பிரிவின்படி உரிமம் ஒன்றினை பெற்றுள்ள நபர் ஒவ்வொருவரும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு, இந்தச் சட்டத்தின் செய்யப்பட்ட விதிகளுக்கு மற்றும் துணை விதிகளுக்கு மற்றும் உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரைக்கட்டுகளுக்கு இணங்கிய வகையில் இருக்க வேண்டும்.

(7) (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட உரிமத்தைப் பெற்றிருக்கும் ஒவ்வொரு நபரும் இயக்குநரால் குறிப்பிடப்படலாகிறவாறான உண்மையான மற்றும் சரியான கணக்கினை மற்றும் அத்தகைய விவரங்களைக் காட்டும் பதிவுறுக்களை வைத்து வரவும் மற்றும் பராமரிக்கவும் வேண்டும், மற்றும் விவர அடிப்படையில் கட்டணம் அல்லது பாக்கியாகவுள்ள பிறதொகையுடன் சேர்த்து வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய காலத்திற்குள் இயக்குநருக்கு வகுத்துரைக்கப்படலாகிறவாறான செய்முறை உள்ளடங்கலாக அவருடைய வணிக பரிமாற்றம் தொடர்பான, அத்தகைய காலமுறைப்படியான விவரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவில் வரம்புரைக்குப் பின்பு, பின்வரும் வரம்புரை புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது.– 24–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**மேலும், வரம்புரை:** ஆனால் மாநிலத்திற்குள் அறிவிப்பு செய்யப்பட்ட சந்தைப் பரப்பிடம் எதிலும் அறிவிப்பு செய்யப்பட்ட வேளாண் விளைபொருளை வாங்குவது அல்லது விற்பனை செய்வது எதன்பேரிலும் கட்டணம் எதுவும் ஒரு தடவைக்கு மேல் விதிக்கப்படுதல் கூடாது.

**6.** முதன்மைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் வரம்புரையில் நான்கு ஆண்டுகள் என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஆறு ஆண்டுகள்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 33 ஆம் பிரிவிற்கான திருத்தம்

**7.** முதன்மைச் சட்டத்தில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும் விற்பனைக் குழுக்களின் தனி அலுவலர் ஒருவரின் அதிகாரங்களைச் செயலுறுத்தல் மற்றும் செயற்பணிகளைச் செய்து முடிக்கும் நபர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி மேற்சொன்ன விற்பனைக் குழுக்களின் தனி அலுவலர்கள் 2015 மே 31 ஆம் நாளன்று மற்றும் அன்றிலிருந்து செல்திறத்துடன் பணியமர்த்தம் செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். இந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி தமிழ்நாடு அரசிதழில் இந்தச் சட்டத்தின் வெளியீடு தேதியுடன் முடிவடையும் மற்றும் 2015 மே 31 அன்று தொடங்கும் காலத்தின் போது மேற்சொன்ன தனி அலுவலர்களால் செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட செயல் எதுவும் செல்லுந்தன்மையுடன் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். செல்லுந்தன்மையுடையதாகுதல்

**நோக்கக் காரண விளக்கவுரை**

இந்திய அரசு, 2014–15 முதல் 2016–17ஆம் ஆண்டு வரையிலான காலத்தின்போது, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மொத்த விற்பனைக் கூடங்களில், வேளாண் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு நிதி மூலம் தேசிய வேளாண் சந்தையை (National Agricultural Market) அமைப்பதற்கான திட்டமொன்றை கொண்டு வருவதெனக் கருதியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்திட வேளாண் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு நிதியின் கீழ் ஒரு விற்பனைக் கூடத்திற்கு ரூ.30 இலட்சம் வீதம் மானியம் பெற்றிட மின்னணு வர்த்தகம், சீரான ஒருமுனை உரிமம், ஒருமுனை விற்பனைக் கட்டணத் தீர்வை ஆகியவற்றை இந்திய அரசின் வேளாண் அமைச்சகம் மற்றவற்றிற்கிடையில் கட்டாயத் தேவையாக இருக்கின்றது என்று ஆலோசித்தது. தற்போது அனைத்து 277 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் மிகவும் கடினமானதும், அதிக நேரம் எடுத்துக் கொள்ளக்கூடியதுமான மனித ஆற்றல் மூலம் ஏலம் நடத்தப்படுகிறது. மேலும், இது ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூட எல்லைக்குட்பட்டே உள்ளது. எனவே, இந்திய அரசின் நிதி உதவியைப் பெற்றிடவும், நமது ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை தேசிய வேளாண் சந்தை மின்னணு செயல்வழிமுறைத் திட்டத்தில் இணைத்திடவும், 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 27/1989) மின்னணு வர்த்தகம், சீரான ஒருமுனை உரிமம், ஒருமுனை விற்பனைக் கட்டணத் தீர்வை ஆகியவை தொடர்பாக தேவையான வகைமுறைகளைக் கொண்டு வரவேண்டும் என்று கருதியுள்ளது.

2. மேலும், மேற்சொன்ன 27/1989ஆம் தமிழ்நாடு சட்டத்தின் 33ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்படி, பணி அமர்த்தம் செய்யப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக் காலம் 30.5.2015 அன்று முடிவடைந்து விட்டது மற்றும் விற்பனைக் குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கு அதிகப்படியான கால அவகாசம் ஏற்படும் என்பதால், புதிய உறுப்பினர்களை நியமனம் செய்யும் வரையில், தனி அலுவலர்களின் பதவிக் காலத்தினை 30.5.2015க்கு மேல் நீட்டிப்பு செய்வது அவசியமானதாக இருக்கின்றது. எனவே, மேற்கண்ட நோக்கங்களுக்காக மேற்சொன்ன 27/1989 தமிழ்நாடு சட்டத்தினை திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்திருக்கிறது. மேலும், 2015, மே 31 அன்று அல்லது அதற்குப் பின்பு மேற்சொன்ன தனி அலுவலர்களால் செய்யப்பட்ட அனைத்து செயல்களும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் செல்லுந்தன்மையுடையதாக இருக்கும்.

**3.** இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**இரா. துரைக்கண்ணு,**
*வேளாண்மைத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்
*செயலாளர்.*

2017–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2017.**

***1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாக அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதனை) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் 41–ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவிற்குப் பின்பு பின்வரும் உட்பிரிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :-

தமிழ்நாடு சட்டம் XXXVI/1947.

41 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(2–A) மேல்முறையீட்டு அதிகார அமைப்பு இந்தச் சட்டத்தின்படி, நபர் எவரின் ஆவணம் அல்லது வாய்மொழி சான்று எதுவும் தொடர்புடையதாகவும் அல்லது அதனுடைய கடமைகளை செய்து முடிப்பதற்காக தேவையானதாக இருக்கிறது என்று கருதுகிறதென்றால் மேல்முறையீட்டு அதிகார அமைப்பானது அத்தகைய நபரை அழைத்து மற்றும் அத்தகைய ஆவணத்தை ஆய்வு செய்து அல்லது அழைப்பாணை அனுப்பி மற்றும் ஆய்வு செய்யலாம். மேற்சொன்ன நோக்கங்களுக்காக பின்வரும் பொருட்பாடு தொடர்பாக அதாவது 1908–ஆம் ஆண்டு உரிமையியல் தொகுப்புச் சட்டத்தின்படி (மையச் சட்டம் V/1908) வழக்கு விசாரணை செய்யப்படும்போது பின்பற்றப்படும் :-

(i) நபர் எவரையும் அழைப்பாணை அனுப்பி மற்றும் கட்டாயமாக வருமாறு கூறலாம் மற்றும் ஆணை உறுதிமொழியின் பேரில் அவர் ஆய்வு செய்யப்படுதல்.

(ii) ஆவணங்களைக் கொண்டு வந்து காட்டுமாறு கட்டாயப்படுத்துதல்.

(iii) சாட்சிகளை விசாரிப்பதற்காக ஆணையங்களை அமைத்தல், ஆகியவற்றிற்கு உரிமையியல் நீதிமன்றம் ஒன்றிடம் உற்றமைந்துள்ளவாறான அதே போன்ற அதிகாரங்களை அது பெற்றிருக்கும்.

(2–B) மேல் முறையீட்டு அதிகார அமைப்பு, வேலை தருபவருக்கு மற்றும் பணியமர்த்தம் செய்யப்பட்டவருக்கு வகுத்துரைக்கப்பட்ட முறையில் அறிவிப்பு கொடுத்த பின்பு மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்யலாம் அல்லது பணியமர்த்தம் செய்யப்பட்ட நபர் பணியிலிருந்து நீக்கப்பட்டு வெளியேயிருந்த காலத்திற்கு ஊதியத்துடன் அல்லது ஊதியமில்லாமல் திரும்பவும் சேர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தலாம் அல்லது மறுபடியும் சேர்த்துக் கொள்ளாமல் இழப்பீட்டினை வழங்குமாறு அறிவுறுத்தலாம் அல்லது பிரச்சனையின் சூழ்நிலைக்கேற்ப அது பொருத்தமென தோன்றும் அத்தகைய பிற நிவாரணத்தை வழங்கலாம்."

3. முதன்மைச் சட்டத்தின் 45–ஆம் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:- 45 ஆம் பிரிவிற்கான மாற்றாக்கம்.

"**45. தண்டங்கள்.**– 7 முதல் 11, 13 முதல் 23, 25, 26, 29 முதல் 41 மற்றும் 47 ஆம் பிரிவுகளின் வகைமுறைகள் எதற்கும் நபர் எவரும் முரண்பட்டிருக்கிறார் என்றால் அதுமுதற் குற்றமாக இருக்கின்றபட்சத்தில் ஐயாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்துடன் மற்றும் அது இரண்டாவதாக அல்லது அதற்கடுத்தப்படியான குற்றமாக இருக்கின்ற பட்சத்தில் பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்துடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்".

**நோக்க காரண விளக்கவுரை**

1947–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் XXXVI/1947) உள்ள 41 –ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி, பணியமர்த்தம் செய்யப்பட்ட நபர் ஒருவர், தகுமான காரணமின்றி அல்லது பணியில் அமர்த்துபவரின் விசாரணையில் தவறான நடத்தையின் அடிப்படையில் குற்றம் எதுவும் செய்யாதவராக இருந்திருக்கின்றார் எனும்போது அவர் பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தால், அவர் உரிய காலத்தில் மேல்முறையீட்டு அலுவலருக்கு, மேல்முறையீடு ஒன்றை செய்வதற்கு உரிமை உடையவர் ஆவார். அத்தகைய மேல்முறையீட்டினை சிறந்த முறையில் தீர்வு செய்யும் பொருட்டு, 1908-ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின்படி (மையச்சட்டம் V/1908) உரிமை வழக்கொன்றை விசாரணை செய்யும் பொழுது, பின்பற்றப்படும் அழைப்பாணை அனுப்புதல் மற்றும் நபர் எவரையும் வருமாறு கட்டாயப்படுத்துதல் மற்றும் ஆணை உறுதிமொழியின் பேரில் விசாரணை செய்தல், ஆவணங்களைக் கொண்டு வந்து காட்டுமாறு கட்டாயப்படுத்துதல் மற்றும் சாட்சிகளை விசாரணை செய்வதற்காக ஆணையங்களை அமைத்தல் ஆகியவற்றின் அடிப்படையின் பேரில், அரசு, 1908-ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின்படி உரிமை வழக்கொன்று விசாரணை செய்யப்படும்பொழுது மேற்கண்டவற்றிற்கு அளிக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களை போன்றே அதிகாரங்களை வழங்குவதென முடிவு செய்திருக்கிறது. மேலும், மேற்சொன்ன சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரண்பட்டிருப்பதற்காக வகுத்துரைக்கப்பட்ட தண்டத் தொகையானது, 1947 ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டது. அரசு, தண்டத் தொகையை அதிகரிப்பதென முடிவு செய்துள்ளது. அதன்படி, அரசு, மேற்கண்ட நோக்கத்திற்காக XXXVI/1947 தமிழ்நாடு சட்டத்தைப் பொருந்தத்தக்க வகையில் திருத்தம் செய்வதென முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**டாக்டர் நிலோபர் கபில்,**
*தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்
*செயலாளர்.*

2017–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2017.**

**1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு:-**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

1. (1) இந்தச் சட்டம், 2017-ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும்.

(2) இது, மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வரும்.

தமிழ்நாடு சட்டம் 43/1981

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டத்தின் 2-ஆம் பிரிவில் (a) எனும் கூறிலுள்ள (ii) எனும் இனத்தில் "மாதத்திற்கு மூன்றாயிரத்து ஐநூறு ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறுகிற" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மாதத்திற்கு பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறுகிற" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## நோக்க – காரண விளக்கவுரை

**1981**–ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், (தமிழ்நாடு சட்டம் **43/1981**) 2-ஆம் பிரிவின் (a) எனும் கூறில் (ii)–ஆம் இனத்தின்படி 'பணியாளர்' என்ற பதத்தின் பொருள்வரையறையிலிருந்து, மூவாயிரத்து ஐநூறு ரூபாய்க்கு அதிகமாக மாத ஊதியம் பெறும் மேற்பார்வையாளர்களை கொண்டுவராததால், இச்சட்டத்தின்படி தற்காலிக பணி நீக்க காலத்தின்போது அவர்கள் பிழைப்பூதியம் பெற இயலாத நிலையில் உள்ளனர். கடந்த **1999**-ஆம் ஆண்டில் இந்த ஊதிய உச்சவரம்பு, திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு பின்னர், ஊதிய விகிதங்களில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அம்மாற்றங்களைத் தொடர்ந்து, **1947**-ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டம் (மையச்சட்டம் XIV/1947), **1936**-ஆம் ஆண்டு சம்பளப் பட்டுவாடாச் சட்டம் (மையச் சட்ட எண் IV/1936) மற்றும் **1948**-ஆம் ஆண்டு மாநில பணியாளர்கள் காப்பீட்டுச் சட்டம் (மையச் சட்ட எண் XXXIV/1948) ஆகிய சட்டங்களில் வகுத்துரைக்கப்பட்டுள்ள ஊதிய உச்ச வரம்பு, தற்போது, மேற்சொன்ன மாற்றங்களுடன் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்சொன்ன சட்டத்தின்படி வகுத்துரைக்கப்பட்ட மாத ஊதிய உச்ச வரம்பை ரூபாய் மூவாயிரத்து ஐநூறுலிருந்து ரூபாய் பதினைந்தாயிரமாக உயர்த்திட மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, இச்சட்டத்தில் மேலே கூறப்பட்டுள்ள மாத ஊதிய உச்ச வரம்பை ரூபாய் பதினைந்தாயிரமாக உயர்த்திட அரசு முடிவு செய்துள்ளதுடன், மேற்சொன்ன **43/1981** தமிழ்நாடு சட்டத்தின் **2**-ஆம் பிரிவின் (a) எனும் கூறின் (ii)–இனத்தை பொருந்தத்தக்க வகையில் திருத்தம் செய்வதென முடிவு செய்திருக்கிறது.

**2.** இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**டாக்டர் நிலோபர் கபில்,**
*தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்
*செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU